**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.2-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆலிஸ் இருதய மேரி | ஜாதி | : | |
| க.பெ | : | சம்மனசு | தொழில் | : | சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 67/2026 |
| தேதி | : | 07.04.2026 | | | |

**11** வது பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

நீங்கள் எந்த வருடம் பிறந்தீர்கள் என்றால் 1959 ஆம் ஆண்டு பிறந்தேன். 1958 ஆம் ஆண்டு உங்களது தாத்தா இறந்தபோது குடும்ப சூழ்நிலை பற்றிய விபரம் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்கள் பாட்டி செசிலியம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1975 ஆம் ஆண்டு இறந்தார். 1975 ஆம் ஆண்டிலும் நீங்கள் மைனராக இருந்ததால் அப்போதும் உங்கள் குடும்ப சூழ்நிலை பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்கள் தாயார் உயிரோடு இருக்கும் வரை அவருடைய சகோதரர் அந்தோணியிடமோ, மற்றும் மரியசூசை மனைவி சம்மனசு அம்மாளிடமோ பாகம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.1 ம் வாதி ஜெர்மன் அம்மாள் 2006 ஆம் ஆண்டு இந்த அசல் வழக்கு தாக்கல் செய்த பிறகு உங்களது தாயார் 12 ம் பிரதிவாதி பாகம் கோரி தனி வழக்கோ, அல்லது தாவா வழக்கில் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்த்துக்கொண்டு வழக்கினை நடத்தி தனது பாகத்தை பிரித்து தர கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இந்த அசல் வழக்கில் 11 ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்உரையிலும், 1 ம் வாதியின் குறுக்கு விசாரணையிலும் இந்த 11 ம் பிரதிவாதி தரப்பில் காலம் சென்ற இருதயத்தின் மற்ற வாரிசு தாரர்களை ஒரு தரப்பினராக சேர்க்காத தோசத்திற்கு அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்வாதம் புரிந்த காரணத்தினாலேயே மேற்படி 1 ம் வாதி மேற்படி 12, 13 ம் பிரதிவாதியையும் ஒரு தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் உங்களது தாயர் 12 ம் பிரதிவாதி தாவா வழக்கில் ஒரு தரப்பினராக எதிர்வாதம் புரிந்தார் என்றால் சரிதான். உங்களது தாயார் ஆவணங்களில் கையொப்பம் தான் வைப்பார் என்றால் ரேகை தான் வைப்பார்.

இந்த வழக்கில் ஆஜரானபோது உங்களது தாயாருக்கு வயது 78 என்றால் சரிதான். அக்கால கட்டத்திலும் உங்களது தாயார் உடல்நிலை சரியில்லாமல் தோட்டத்து

வீட்டில் தான் குடியிருந்து வந்தார் என்றால் உடல் நலத்துடன் தான் இருந்து வந்தார். அக்கால கட்டத்தில் உடல்நிலை சரியில்லாமலும், மனநிலை சரியில்லாமலும் உங்களது தாயார் வீட்டில் தான் இருந்து வந்தார் என்றும், அவரது மருமகனான என்னுடைய கணவரான 1ம் பிரதிவாதி தான் வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி 12 ம் பிரதிவாதியின் பாகத்தினை அடைய வேண்டும் என்ற நோக்கில் தாவா வழக்கின் அசல் ஆவணங்கள் அனைத்தும் மேற்படி 1ம் பிரதிவாதி தன்னுடைய மாமியாரான 12வது பிரதிவாதி வசம் இருந்ததாக துலக்கி அனைத்து ஆவணங்களையும் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

12ம் பிரதிவாதி எக்காலத்திலும் பாகம் கேட்கவில்லை என்றும், அவரிடம் அசல் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி ஜெர்மன் அம்மாள் தனது பிராதிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையிலோ எங்காவது தாவா சொத்துக்களில் 12ம் பிரதிவாதிக்கு உண்டான 5 ல் ஒரு பாகத்தினை நீங்கள் நிர்வகித்து வந்து அதன் ஒரு பகுதியில் 1998 ம் வருடத்தில் உங்களது செலவில் ஒரு RCC வீடு கட்டி குழந்தைகளுடன் குடியிருந்து வந்தார் என்று கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். உங்களுடைய கணவர் 1ம் பிரதிவாதி தனது எதிர்உரையிலோ 1ம் வாதியின் குறுக்கு விசாரணையிலோ எங்காவது தாவா சொத்துக்களில் 12ம் பிரதிவாதிக்கு உண்டான 5 ல் ஒரு பாகத்தினை நீங்கள் நிர்வகித்து வந்து அதன் ஒரு பகுதியில் 1998 ம் வருடத்தில் உங்களது செலவில் ஒரு RCC வீடு கட்டி குழந்தைகளுடன் குடியிருந்து வந்தார் என்று கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார்.

கடந்த 2006 ல் 1ம் வாதி வழக்கில் தனது பாகத்தினை பிரித்து தரக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கு தாக்கல் செய்த விபரம் உங்களுக்கும், உங்களது தாயாருக்கும் தெரிந்த நிலையில் உங்களது தாயாருக்கு பாகம் இல்லாத காரணத்தினால் தான் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்ய நீங்கள் அறிவுறுத்தவில்லை என்றும், உண்மையிலேயே 1998 ஆம் ஆண்டிலேயே தாவா பிராது சொத்தில் நீங்கள் வீடு கட்டி குடியிருந்து வந்திருந்தால் நீங்கள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னரே உங்களது மாமனார் அந்தோணி கட்டிய வீட்டில் தான் நீங்கள் வீட்டினை பராமரிப்பு செய்து தற்போது வரை குடியிருந்து வருகிறீர்கள் என்றால் இல்லை. நான் தான் தனிப்பட்ட முறையில் சம்பாரித்து கட்டினேன். இந்த வழக்கில் உங்கள் தாயாரை ஒரு தரப்பினராக சேர்ந்த பின்னரே மேற்படி பொய்யான தகவலை உங்களுடைய கணவர் 1 ஆம் பிரதிவாதியின் ஏற்பாட்டின் பேரில் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

1998-ல் உங்களுடைய செலவில் தான் மேற்சொன்ன வீட்டை கட்டினேன் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்தைய வீட்டு வரி ரசீதை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 2024 ஆம் வருட வீட்டு வரி ரசீதை தான் தாக்கல் செய்துள்ளேன். 1998 -ல் இருந்து மேற்சொன்ன வீட்டை நீங்கள் உங்களுடைய

சம்பாத்தியத்தில் கட்டி குடியிருந்து வருவதாக சொல்வது இவ்வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நீங்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கான வீட்டு வரி ரசீது , மின் கட்டண ரசீது, குடிநீர் வரி ரசீது 2024 ஆம் ஆண்டு வரை உங்களது மாமனார் அந்தோணி பெயரில் தான் இருந்தது என்றும் வழக்கிற்காக பின்னிட்டு உங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் குடியிருக்கும் வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 446 ல் உள்ளது உட்பிரிவு தெரியவில்லை. அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்சொன்ன சர்வேஎண்ணிற்காக வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் இருக்கிறது என்றால் தாத்தா இருதயம் பெயரில் தான் உள்ளது. நீங்கள் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண். உங்களுடைய மாமனார் அந்தோணி மற்றும் இவ்வழக்கின் 9 முதல் 11 ஆம் பிரதிவாதிகளின் பெயரில் கூட்டாக வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு இன்று வரை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

உங்களது நிருபண வாக்குமூலத்தில் உங்களது கணவர் 1 ஆம் பிரதிவாதி குடிப்பழக்கம் காரணமாக குடும்ப பொறுப்பின்றி இருந்ததால் அவரது மகனான 2 ஆம் வாதியை 1 ஆம் வாதியே படிக்க வைத்து வளர்த்தேன் என்ற விபரத்தை 1 ஆம் வாதி அவரது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. 1 ஆம் வாதி யாருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் எனது மகன் ஜெரால்டுக்கு எழுதி வைத்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் எனது சின்னம்மா இறந்த அன்று தெரிந்து கொண்டேன். அந்த உயில் ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை.அந்த உயில் ஆவணத்தில் உங்களது கணவர் 1 ஆம் பிரதிவாதி குடிப்பழக்கம் காரணமாக குடும்ப பொறுப்பின்றி இருந்ததால் அவரது மகனை 1 ஆம் வாதியே வளர்த்து படிக்க வைத்தார் என்று கூறியுள்ளாரா என்றால் நான் படித்து பார்க்கவில்லை.அந்த உயிலில் எத்தனை பாகம் எழுதி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

30.11.1969 ஆம் தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிக்கா ஆவணத்தினை 1 ஆம் வாதி தனது பிராதிலும் நிருபண வாக்கமூலத்திலும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் தற்போது நீங்கள் மேற்படி ஆவணத்தினை ஆட்சேபணை செய்வது சட்டத்திற்கு புறம்பானது என்றும், அதே போல் 30.11.1969 ஆவணத்தினை 13 ஆம் பிரதிவாதியின் தாயார் சந்தியாகம்மாளும் ஏற்றுக் கொண்டு இறக்கும் வரையிலும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்களது தாயாரும் மேற்படி ஆவணத்தினை பொறுத்து மேற்படி அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்து எதிர்வாதம் புரியும் வரையில் மேற்படி ஆவணத்தினை ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.16 ஆவணம் உங்களது தாயார் மரிய புஷ்பம் எழுதி வைத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். மேற்கண்ட உயில் ஆவணம் பதியப்படவில்லை ஆனால் நோட்டரி அட்வகேட் முன்னிலையில் பதியப்பட்டுள்ளது. உயில் பற்றி உங்களுக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனது கணவர் இறந்த 40 ஆவது

நாள் தெரிய வந்தது. யார் உயிலை உங்களிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்றால் என்றால் எனது அம்மா நேரடியாக கொண்டு வந்து கொடுத்தார். உங்களது கணவர் எந்த தேதியில் இறந்தார் என்றால் 2019 ஆம் ஆண்டு இறந்தார். உங்களது அம்மா எந்த வருடம் இறந்தார் என்றால் 2020 ஆம் ஆண்டு இறந்தார். இந்த உயில் ஆவணம் 2014 ஆம் ஆண்டிலேயே எழுதப்பட்டுள்ளது. 1 ஆம் வாதி ஜெர்மன் அம்மாள் 2012 ஆம் ஆண்டு இறந்தார். 1 ஆம் வாதி இறந்த 2012 ஆம் ஆண்டிலேயே உங்களது மகன் ஜெரால்டு 2 ஆம் வாதியாக இருந்து தாவா வழக்கினை நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

2014 ஆம் வருடம் உங்கள் மகன் இந்த வழக்கினை நடத்தி கொண்டிருக்கும் போது உங்கள் அம்மா இந்த உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இந்த உயிலை எழுதும் போது உங்களது தாயார் வெள்ளோட்டில் உங்களது சகோதரர் ் அருளானந்து ஆரோக்கியசாமியுடன் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். உங்கள் அப்பா கடைசி வரையிலும் எங்கிருக்கிறார் என்ற விபரம் எங்களுக்கு தெரியாது. அவரை தேடி இன்று வரையிலும் மனு கொடுத்துள்ளோம்.உயிலில் எந்த இடத்திலும் உங்களது அப்பாவை பற்றி சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. இந்த உயில் பத்திரத்தை எங்கு வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் என்னிடம் அம்மா என்னிடம் சொன்னார்கள். பஞ்சம்பட்டியில் சேவியர் என்ற என்னுடைய சொந்தக்கார பையன் கையெழுத்து செய்துள்ளார்.செல்லம் என்பவர் வழக்கறிஞர் அசோக் குமார் சாருடைய மனைவி. வினோத்குமார் என்பவர் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி உயிலை யார் எழுதியுள்ளது என்றால் வழக்கறிஞர் அசோக்குமார் எனது அம்மா சொல்லி அவர் எழுதினார். நோட்டரி வக்கீல் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். உங்களுடன் உடன்பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் 3 சகோதரிகள், 1 சகோதரர். இந்த உயில் ஆவணத்தில் அவர்கள் யாரும் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் உங்கள் தாயார் இறப்பிற்கு பின்னர் உங்களுடைய மற்ற சகோதரிகள் மற்றும் சகோதரர் இந்த வழக்கின் பாகத்தினை பிரித்து தரக்கோரி சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் உங்களுடைய தாயார் அசல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது என்று சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை.

இந்த உயில் ஆவணத்தினை 12 ஆம் பிரதிவாதியான உங்களது தாயார் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் உள்ள கைரேகையும் உங்கள் அம்மாவின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல எனது அம்மாவினுடையது தான்.உண்மையிலேயே கடந்த 14.04.2014 ஆம் தேதி மேற்படி உயில் எழுதப்பட்டிருக்கும் பட்சத்தில் கடந்த 14.04.2014 ஆம் தேதி மேற்படி 12 ஆம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள counter claim மனுவில் சொல்லியிருப்பார்கள் என்றும் மேற்படி உயில் வழக்கிற்காக பின்னிட்டு தயார்

செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் திண்டுக்கல்லில் உரிமம் பெற்ற ஸ்டாம்ப் வெண்டார் பலர் இருக்க திண்டுக்கல்லில் இருந்து 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேடசந்தூரிலிருந்து ரூபாய் 100 மதிப்புள்ள ஆவணத்தினை பெற்று இந்த உயில் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த உயில் ஏற்பட்ட காலத்தில் உங்களது தாயார் 78 வயது முதியவராக இருந்த காரணத்தினால் இந்த உயிலினை உங்களுக்கு சாதகமாக எழுதி வைக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தாவா உயில் உள்நோக்கத்தோடு 2 ஆம் வாதியான உங்களது மகன் 1 ஆம் பிரதிவாதியான உங்களது கணவர் மற்றும் நீங்கள் மூவரும் இணைந்து தாவா உயிலினை வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சாட்சியம் சொன்னது போல் எக்காலத்திலும் மரியபுஷ்பம், சந்தியாகம்மாள் கூட்டாக அனுபவம் செய்ததும் கிடையாது. எக்காலத்திலும் பாகமும் கேட்டது கிடையாது என்றால் சரியல்ல. அதே போல் 12 ஆம் பிரதிவாதி தாவா பிராது சொத்தினை கூட்டாக அனுபவம் செய்வதாக கூறி நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ள பிரிவுகளும் தவறான ஒன்று என்று சொன்னால் சரியல்ல.

தாவா பிராது சொத்துக்களுக்கு உங்களது மாமனார் அந்தோணி மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகளின் பெயர்களில் சட்ட காலவரையறை காலங்களுக்கு மேலாக வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு கூட்டாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா பிராது சொத்துகளில் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்க 12ல் 6 பங்கு அதாவது 2ல் 1 பங்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. உங்களது கணவர் 1 ஆம் பிரதிவாதிக்கு 12ல் 1 பங்கு மட்டுமே பாத்தியம் உள்ளது, உங்களது நிருபண வாக்குமூலத்தில் 30ல் 1 பங்கு பாத்தியம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.இந்த பிரதிவாதி தாவா பிராது சொத்துகளில் 12ல் 6 பங்கு அதாவது 2ல் 1 பங்கினை தனித்து அனுபவம் செய்து வருகின்ற காரணத்தினால் அவர் மீது பொறாமை கொண்டு அவரிடமிருந்து சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற உள்நோக்கோடு உங்களது தாயாரான 12 ஆம் பிரதிவாதியை பயன்படுத்தி நீங்களும் 2 ஆம் வாதியான உங்களது மகனும் 1 ஆம் பிரதிவாதியான உங்கள் கணவர் மட்டுமே தாவா வழக்கினை எதிர்வாதம் புரிந்து வருகிறீர்கள் என்றால் சரிய்ல்ல. தாவா பிராது சொத்துக்களை பொறுத்து கடந்த 30.11.1969 ஆம் தேதியே பிரிக்கப்பட்டு தனித்தனியாக அவரவர் பெயர்களில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு தனித்தனியே வரி வகையறா செலுத்தி தனித்து அனுபவம் செய்து வருகின்ற காரணங்களினால் உங்களது தாயாரான 12 ஆம் பிரதிவாதிக்காக நீங்கள் சட்டப்படி தடைபட்டிருக்கிறிர்கள். தாவா பிராது சொத்துக்களில் உங்களது தாயாருக்கென்று பாகம் இல்லாத காரணத்தினால் உங்கள் தாயார் தாக்கல் செய்துள்ள Counter claim மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

உங்கள் தாயார் உயில் எழுதி வைத்த தினத்திலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து இறந்தார் என்றால் உயில் எழுதியது 2014 ஆம் ஆண்டாகும்.என் தாயார் இறந்தது 2020 ஆம் ஆண்டாகும்.

**11 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

மறு விசாரணையில் கேட்கப்பட்ட கேள்வி குறித்து குறுக்கு விசாரணை இல்லை என்று 11 ஆம் பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டது.

**13 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

காலஞ்சென்ற மாங்குடி இருதயத்தின் மகள் தான் 13 ஆம் பிரதிவாதியின் தாயார் சந்தியாகம்மாள் என்றால் சரிதான். இறந்த சந்தியாகம்மாள் உங்களுடைய பெரியம்மா என்றால் சரிதான்.சந்தியாகம்மாள் உள்ளூரிலேயே குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். சந்தியாகம்மாள் உயிருடன் இருக்கும் வரை தனது சகோதரரான அந்தோணி மற்றும் மரிய சூசையின் மனைவி சம்மனசம்மாளிடம் பாகம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். கடந்த 2006 ஆம் தேதி 1 ஆம்வாதி வழக்கில் தாக்கல் செய்ததில் இருந்து மேற்படி சந்தியாகம்மாள் இறக்கும் வரையிலும் பாகம் கோரி மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் சந்தியாகம்மாள் உயிருடன் இருக்கும் வரையில் தாவா பிராது சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். சந்தியாகம்மாள் இறந்த பின்பு 13 ஆம் பிரதிவாதி சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்யவில்லை பாகம் ஏதும் கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor